**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.362/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.4 |
| Name : | யாஷானுல்லா |
| Father's Name/Husband Name: | காதர் மொய்தீன் |
| Village : | குரும்பலூர் |
| Taluk : | பெரம்பலூர் |
| Age : | 56/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 16.06.2026

**(1969-ம் ஆண்டின் 54வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி சம்சாத் ஆஜர் )**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எங்கள் பக்கத்து வீட்டில் தான் குடியிருந்து வருகிறார். எதிரியை எனக்கு தெரியாது. போலிசார் என்னிடம் காவல் நிலையம் சென்றபோது கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டபப்படும் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த **கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1ன் வீட்டில் திருட்டு போனது சம்மந்தமாக ஆஜர் எதிரியை கைது செய்து விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து நிசாத் பாபு மற்றும் என் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதில் அ.சா.1ன் வீட்டில் இருந்த பீரோவை உடைத்து உள்ள இருந்த நகைகளை திருடி சென்றதாகவும், தற்போது போலிசார் தன்னை பிடித்ததால் திருடிய நகைகளை தங்களிடம் ஒப்படைக்கிறேன் என்று வாக்குமூலம் கொடுத்ததாக போலிசார் விசாரைணயில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னிடம் கையொப்பம் பெற்ற தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எந்த ஒரு திருடு போன பொருட்களையும் என் முன்னிலையில் போலிசார் கைப்பற்றவில்லை என்றால் சரிதான்.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.